அழாதே அம்மா அழாதே அம்மா உன்மகன் இருக்கிறேன் அழாதே அம்மா 2
தலைமறைவாய் நான் இருந்து தடையை போக்கவே
நம் குனிந்த தலை நிமிர்வுக்காகஉறவை ஊக்கவே
நமது வீரம் தோர்ப்பதில்லை ஜெயித்துக்காட்டவே
நாம் அடிமையல்ல என்று கூறி சிரிப்பை மூட்டவே

அழாதே அம்மா அழாதே அம்மா உன்மகன் இருக்கிறேன் அழாதே அம்மா

அன்று உந்தன் வையிற்றில் பெற்ற சூடு போதுமே
அந்த சூட்டில் எதிரி தன்னை காவு வாங்குவேன்
அன்று உந்தன் அணைப்பில் பெற்ற சக்திபோதுமே
அன்பு சக்தி அதனை கொண்டு ஆண்மை வாங்குவேன்
அன்று உந்தன் மடியில் பெற்ற பாடம் போதுமே
அந்தப்பாடம் உணர வைக்க நாடு வாங்குவேன்
நான் நாடு வாங்குவேன் நீ

அழாதே அம்மா அழாதே அம்மா உன்மகன் இருக்கிறேன் அழாதே அம்மா

அன்று உந்தன் பாலில் பெற்ற தூய்மை போகுமே
அந்த தூய்மை நிலைவில் நிற்க நேர்மை வாங்குவேன்
அன்று உந்தன் தோளில் பெற்ற சாந்தி போதுமே
அந்த சாந்தி அதற்கு ஒப்ப அமைதிவாங்குவேன்
அன்று உந்தன் சோர்வில் பெற்ற வீரம் போதுமே
அந்த வீரம் நிலைக்கும் என்று விடியல் வாங்குவேன்
நான் விடியல் வாங்குவேன் நீ

அழாதே அம்மா அழாதே அம்மா உன்மகன் இருக்கிறேன் அழாதே அம்மா